# Joint Action Committee of Non-Executive Unions

## தமிழ் மாநிலம்

## பெருந்திரள் தர்ணா - 23/09/2014

30 அம்ச கோரிக்கைகளில் எந்த வித முன்னேற்றமும் இது வரை ஏற்படாத சூழலில், 05.09.2014 அன்று கூடிய மத்திய கூட்டு போராட்டக்குழு கூட்டம் 23.09.2014 அன்று மாநில மாவட்ட தலை நகரங்களில் பெருந்திரள் தர்ணா போராட்டத்தினை நடத்திட அறைகூவல் விடுத்துள்ளது.

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் 23.09.2014 அன்று தர்ணா போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திடவேண்டும் என்று தமிழ் மாநில கூட்டுப் போராட்டக்குழு சார்பாக கேட்டுக் கொள்கிறோம். அனைத்து மாவட்டங்களிலும் கூட்டு போராட்டக்குழு கூட்டங்களை கூட்டி தர்ணா போராட்டத்தை திட்டமிட்டு வெற்றிகரகாக நடத்திடவேண்டும் என்று மாநில கூட்டு போராட்டக்குழு சார்பாக வேண்டுகிறோம்.

கேளாக்காதினரை கேட்கவைப்போம்...

கோரிக்கைகளை வென்றெடுப்போம்...

**ஒன்றுபடுவோம்...**

**போராடுவோம் ....**

**வெற்றி பெறுவோம்...**

தோழமையுடன்,

| | |
|---|---|
| S.செல்லப்பா | R.பட்டாபிராமன் |
| கன்வீனர். | தலைவர் |
| -sd- | -sd- |
| A.செல்லப்பாண்டியன் | P.அழகுபாண்டியராஜா |
| மாநிலச்செயலர் TEPU | மாநிலச்செயலர் SNATTA |

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

# 23/09/2014 – பெருந்திரள் தர்ணா

# கோரிக்கைகள்

1. RM, Gr.D, தொழிற்சாலை தொழிலாளர்கள் உள்ளிட்ட கேடர்களில் ஏற்பட்டுள்ள ஊதிய தேக்க நிலை (STAGNATION)க்கு தீர்வு காண வேண்டும்.
2. 01.01.2007க்கு முன்னும் பின்னும் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள ஊதிய சமநிலயற்ற தன்மை(WAGE DISPARITY) நீக்கப்பட வேண்டும்.
3. புதிய PLI ஃபார்முலா உருவாக்கப்பட்டு PLI வழங்க வேண்டும். நிறுவனம் நஷ்டத்தை சந்திப்பதை அதில் இணைக்காமல், PMS உடன் தொடர்பை உருவாக்கமால PLI வழங்க வேண்டும்.
4. NEPP அமுலாக்கத்தில் நிர்வாகம் ஏற்படுத்தி உள்ள தடைகளுக்கு தீர்வு காண வேண்டும்.
5. பரிவு அடிப்படையிலான பணி நியமனத்தில் உருவாகி உள்ள தடைகளை நீக்க வேண்டும்.
6. LTC, விடுப்பை காசாக்குதல் மற்றும் மருத்துவ படிகளை திரும்ப வழங்க வேண்டும்.
7. E1 ஊதிய விகிதத்தை உடனடியாக அமுல் படுத்த வேண்டும்.
8. மேலும் கால தாமதமின்றி ஊழியர்களின் கேடர் பெயர் மாற்றங்களை செய்ய வேண்டும்.
9. OFFICIATING JTOக்களுக்கு REGULAR பதவி உயர்வு வழங்க வேண்டும்.
10. நேரடி நியமன ஊழியர்களுக்கு 30% ஓய்வு கால பயன்களை அமுல் படுத்த வேண்டும்.
11. DOP&T உத்தரவின் படி இலாகா தேர்வுகளில் SC/ST ஊழியர்களின் தகுதி மதிப்பெண்களை தளர்த்த வேண்டும்.
12. கடைசியாக நடைபெற்ற JTO/JAO தேர்வு முடிவுகளை கூடுதல் மதிப்பெண் வழங்கி மறு பரிசீலனை செய்ய வேண்டும்.
13. ஊழியர்களின் பதவிகளுக்கு புதியதாக ஆள் எடுப்பு நடத்த வேண்டும்.
14. விடுபட்ட தற்காலிக அந்தஸ்து/காசுவல் ஊழியர்களை நிரந்தரப்படுத்த வேண்டும்.
15. கார்ப்பரேட் அலுவலக உத்தரவுகளான, குறைந்த பட்ச கூலி மற்றும் தொழிலாளர் நலச்சட்டங்களையும், சமூக பாதுகாப்புகளான ESI,EPFஉள்ளிட்டவைகள் அமுலாக்கப்படுவதனை உத்தரவாதப்படுத்த வேண்டும்.
16. MANAGEMENT TRAINEE தேர்விற்கு ஊழியர்களையும் அனுமதிக்க வேண்டும்.
17. டெலிகாம் மெக்கானிக் பயிற்சி பெற்ற அனைவரையும் PERSONAL UPGRADATION முறையில் பதவி உயர்த்த வேண்டும்.
18. IDA ஊதிய விகிதத்தின் அடிப்படையில் தற்காலிக அந்தஸ்து மஸ்தூர்கள்/காசுவல் ஊழியர்களின் ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டும்.
19. SC/ST BACKLOG காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.
20. பதவி உயர்வுக் குழுவிற்கு ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்ட SR.TOA, டெலிகாம் மெக்கானிக், ஓட்டுநர் உள்ளிட்ட கேடர்களின் ஊதிய விகிதங்கள் மாற்ற வேண்டும். பதவி உயர்வு குழுவை புனரமைக்க வேண்டும்.
21. DOTகாலத்தில் பயிற்சிக்கு சென்று BSNLல் பணி நியமனம் பெற்றவர்களுக்கு ஜனாதிபத்திய உத்தரவு வழங்க வேண்டும்.
22. 01.10.200க்கு பின்னர் வருகின்ற அடுத்த ஆண்டு ஊதிய உயர்வு தேதியில் பதவி உயர்வில் ஊதியம் நிர்ணயித்துக் கொள்ளும் விருப்பம் தெரிவிக்க ஊழியர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்.
23. 01.01.2007 முதல் 10.06.2013 வரை பணி ஓய்வு பெற்றவர்களுக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பின் அடிப்படையில் ஓய்வூதியம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.
24. முதல் ஊதிய மாற்றத்தின் அடிப்படையில் ஏற்பட்ட அனாமலிகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும்.
25. டெலிகாம் ஃபேக்டரிகளை புத்தாக்கம் செய்ய வேண்டும்.
26. TM, RAJBASHA ADHIKARI, TTA, JAO மற்றும் JTO தேர்வுகள் எழுதுவதற்கான தகுதி கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டும்.
27. 78.2% பஞ்சப்படி இணைப்பின் காரணமாக தர வேண்டிய நிலுவை தொகைகளை ஊழியர்களுக்கு உடனடியாக பட்டுவாடா செய்ய வேண்டும்.
28. அதிகாரிகளின் CUG, மற்றும் பிற NETWORKகளுடம் பேசும் வசதியுடன் கூடிய 200/-ரூபாய் மதிப்புள்ள் சிம்கார்ட்கள் ஊழியர்கள் அனைவருக்கும் வ்ழங்க வேண்டும்.
29. அலவன்ஸ்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.
30. கால் செண்டர்களை BSNL ஊழியர்களை கொண்டே செயல்படுத்திட வேண்டும். அதனை அவுட்சோர்சிங் செய்வதை நிறுத்த வேண்டும்.

**அனைவரும் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக்கிட வேண்டுகிறோம்.**

**ஒன்றுபடுவோம்…  போராடுவோம் ….  வெற்றி பெறுவோம்…**

தோழமையுடன்,

**தமிழ் மாநில கூட்டுப் போராட்டக்குழு**

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)